

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்தும்,வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்தும் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வண்ணார்பேட்டை அரசு விருந்தினர் மாளிகையில் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மேயர்.கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு. என்.ஓ.சுகபுத்ரா,மாநகர காவல் துறை ஆணையர் ரூபேஸ்குமார் மீனா,மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டனர்.



துணை முதலமைச்சர் ஆக பொறுப்பேற்ற தென்னிந்திய நடிகர் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.10.24) அவரது குறிஞ்சி இல்லம் அலுவலகத்தில் தென்னிந்திய நடிகர் சங்க நிர்வாகிகளான தலைவர் நாசர், பொதுச் செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி, துணை தலைவர்கள் பூச்சி எஸ்.முருகன், கருணாஸ், நடிகர் சங்க அறக்கட்டளை உறுப்பினர்கள் திருமதி.லதா, ராஜேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து நடிகர் சங்கம் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக

# அயராது போராடியவர் பேராசிரியர் ஜி.என்.சாய்பாபா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 15 –

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அயராது போராடிய போராளி மறைந்த பேராசிரியர் ஜி.என். சாய்பாபா என்று தமது இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**பேராசிரியர் ஜி.என். சாய்பாபா அவர்களது மறைவு மனித உரிமைச் செயற்பாட்டுச் சமூகத்துக்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகும். தனது சுதந்திரமும் உடல்நிலையும் அச்சுறுத்தலில் இருந்தபோதும் கூட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக அயராது போராடிய போராளி அவர். பல சவால்களை எதிர்கொண்ட நிலையிலும் சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர் காட்டிய நெஞ்சுரம் வாய்மைக்கான நிலைத்த அடையாளமாக என்றும் நினைவு கூரப்படும்.**

**அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், அவரது அன்புக்குரியோர்க்கும் இந்தக் கடினமான வேளையில் எனது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மழைக் காலத்தில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி

# அத்தியாவசியப் பொருட்கள் கிடைத்திட நடவடிக்கை எடுத்திடுக!

## நெல்லை மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

நெல்லை, அக்.15–

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும்,வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்தும் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வண்ணார்பேட்டை அரசு விருந்தினர் மாளிகையில் மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு. என்.ஓ. சுகபுத்ரா, மாநகர காவல்துறை ஆணையர் ரூபேஸ் குமார் மீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு கூட்டம் நடத்தினார்.

இந்நிகழ்வில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள், நல்ல முறையில் விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும். மேலும் வடகிழக்கு பருவமழை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு செய்யப்பட்டது.

நீர்வளத்துறையின் மூலம் அனைத்து நீர்த் தேக்கங்கள் தூர் வாரப்பட்டு சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் வடிகால்கள் அனைத்தும் மழை நீர் தங்கு தடையின்றி செல்வதற்கு முறையாக வடிகால்கள் பராமரிக்கப்பட்டு கண்காணிக்கப்படவும், மேலும் நீர் நிலைகளில் ஆகாயத் தாமரைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.மழைக் காலங்களில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் தங்குதடை இன்றி கிடைக்கவும்,நியாயவிலைக் கடைகளில் தேவையான பொருட்கள் இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கு வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் மழைக்காலங்களில் நீர்நிலைகளில் பொதுமக்கள் பாதுகாப்பின்றி தேவை இல்லாமல் செல்லாமல் இருப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நெடுஞ்சாலை துறை மூலம் அனைத்து பாலங்களையும் ஆய்வு செய்து போர்க்கால அடிப்படை சீர் செய்யவும், மழைக்காலங்களில் காவல்துறை, தீயணைப்புத்துறை அனைத்து துறையினரும் தேவையான முன்னெச்சரிக்கை மீட்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அம்பிகா ஜெயின், மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் விஜயலட்சுமி, உதவி இயக்குனர் பேரூராட்சிகள் வில்லியம் ஜேசுதாஸ் உள்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்களின் உரிமைகளை மதியுங்கள்; ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துங்கள்! இல்லையெனில்

# மோடி அரசே; வரலாறு உங்களை மன்னிக்காது!

## "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 15-

மக்களின் உரிமைகளை மதியுங்கள்; ஜனநாயகத்தை உண்மையான பொருளில் நடைமுறைப்படுத்துங்கள், இல்லையெனில் மோடி அரசே! வரலாறு உங்களை மன்னிக்காது என 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தீக்கதிர்
2024 அக்.14 திங்கட்கிழமை

மோடி ஆட்சியில் மனித உரிமைகள்: பேரா.சாய்பாபா மரணம் ஒரு சாட்சி!

பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவின் மறைவு, இந்திய ஜனநாயகத்தின் மீது விழுந்த கருங்கறையாகும். இது வெறும் ஒரு தனிமனிதரின் இழப்பல்ல; நமது நாட்டின் நீதி அமைப்பின் சீரழிவையும், மோடி அரசின் மனித உரிமை மீறல்களின் உச்சகட்டத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டும் சோக நிகழ்வாகும்.

மோடி அரசின் ஒடுக்குமுறைக் கொள்கைகளின் நேரடிப் பலியாக பேரா.சாய்பாபா மாறினார். பத்தாண்டுகள் சிறையில் வாடிய இவர், அடிப்படை மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் கொடூரமான சிறைவாசத்தை அனுபவித்தார். மாற்றுத்திறனாளி என்றும் பாராமல், அவருக்கு மிகவும் அவசியமான மருத்துவ சிகிச்சை கூட தொடர்ந்து மறுக்கப்பட்டது. பல

அது வருமாறு:-

பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவின் மறைவு, இந்திய ஜனநாயகத்தின் மீது விழுந்த கருங்கறையாகும். இது வெறும் ஒரு தனி மனிதரின் இழப்பல்ல; நமது நாட்டின் நீதி அமைப்பின் சீரழிவையும், மோடி அரசின் மனித உரிமை மீறல்களின் உச்சகட்டத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டும் சோக நிகழ்வாகும்.

மோடி அரசின் ஒடுக்குமுறைக் கொள்கைகளின் நேரடிப் பலியாக பேரா. சாய்பாபா மாறினார். பத்தாண்டுகள் சிறையில் வாடிய இவர், அடிப்படை மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் கொடூரமான சிறை வாசத்தை அனுபவித்தார். மாற்றுத்திறனாளி என்றும் பாராமல், அவருக்கு மிகவும் அவசியமான மருத்துவ சிகிச்சை கூட தொடர்ந்து மறுக்கப்பட்டது. பல ஆண்டுகளாக ஜாமீன் கோரி போராடியும் அது நிராகரிக்க ப்பட்டது. இது நமது நீதித்துறையின் மனசாட்சியற்ற போக்கையும் காட்டுகிறது.

நீதிக்காகப் போராடிய ஓர் அறிவுஜீவியின் வாழ்க்கை இவ்வாறு கசப்பான முடிவுக்கு வந்திருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது. சித்திரவதைகளை எதிர்கொண்டும், தன் கொள்கைகளில் உறுதியாக நின்ற சாய்பாபாவின் துணிச்சல் போற்றுதலுக்குரியது. அவரது மரணத்திற்கான முழுப் பொறுப்பும் மோடி அரசே ஏற்கவேண்டும்.

மனித உரிமைகள், சமூக நீதி என்ற பெயரில் மோடி அரசு பேசும் அனைத்தும் வெறும் வெற்று வார்த்தைகளே என்பதை சாய்பாபாவின் வாழ்க்கையும் மரணமும் நமக்குத் துல்லியமாகக் காட்டுகின்றன. சர்வதேச ஒப்பந்தங்களையும், உள்நாட்டுச் சட்டங்களையும் மீறி, ஒரு மாற்றுத் திறனாளியை இவ்வளவு கொடூரமாக நடத்திய அரசு, மக்களின் நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்டது.

இந்த அரசின் கீழ், கருத்து சுதந்திரம் என்பது வெறும் கற்பனையாகிவிட்டது. மாற்றுக் கருத்து கொண்டவர்கள் அனைவரும் தேசத்துரோகிகளாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு, சிறையில் அடைக்கப்படுகின்றனர். சாய்பாபா, வரவர ராவ், சுதா பரத்வாஜ் போன்ற அறிவுஜீவிகளின் வாழ்க்கையே இதற்குச் சாட்சி.

சாய்பாபாவின் மரணம் நம் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைக்க வேண்டும். மோடி ஆட்சியில் நடக்கும் கொடூரங்களை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும். மாற்றுக் கருத்து கொண்டவர்களை அடக்குவதற்குப் பதிலாக, அவர்களுடன் உரையாட வேண்டும். அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் மலரும்.

இந்த அரசின் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். இல்லையெனில், இந்தியாவின் ஜனநாயகம் வெறும் பெயரளவிலேயே இருக்கும்.'

மோடி அரசே, மக்களின் உரிமைகளை மதியுங்கள். ஜனநாயகத்தை உண்மையான பொருளில் நடைமுறைப்படுத்துங்கள். இல்லையெனில், வரலாறு உங்களை மன்னிக்காது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவ மழையை

# அனைத்துத் துறையினரும் இணைந்து எதிர்கொள்ள வேண்டும்!

## குமரி மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

நாகர்கோவில், அக்.15 -

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (13.10.2024) எதிர் வரும் வடகிழக்கு பருவ மழை காலத்தை அனைத்து துறையினரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ளவது குறித்த கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர். அழகுமீனா தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தரவதனம் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு, துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுப்பணித் துறை மற்றும் உள்ளாட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்களில் தேவையான தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்கவும், பெருவெள்ள காலங்களில் பாதிப்பு ஏற்படக்கூடிய கால்வாய் மற்றும் குளக்கரைகளை சீரமைக்கும் பணிகளை விரைந்து முடிக்கவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பருவ மழை காலங்களில் சீரமைப்பு பணிகளுக்கு தேவையான மணல் மூட்டைகள், மரம் அறுக்கும் இயந்திரங்கள், ஜேசிபி, மின்மோட்டார் போன்றவற்றை போதுமான அளவில் தயார்நிலையில் வைக்கவும், தற்காலிக தங்கும் முகாம்களை உடனடியாக பார்வையிட்டு அவற்றில் போதிய அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டது. பழுதான நிலையில் உள்ள அபாயகரமான கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த சம்மந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. 15 தினங்களுக்கு ஒருமுறை ஊராட்சி, பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை குளோரினேசன் செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடலோரப்பகுதிகள் மற்றும் வெள்ள அபாய பகுதிகளில் பாதிக்கப்படும் நபர்களை மீட்க தேவையான மீட்பு உபகரணங்களை தயார்நிலையில் வைக்க மீன்வளத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கு தெரிவிக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை கண்டறிந்து உடன் நடவடிக்கை எடுக்கவும் மேலும் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளவும் பொது சுகாதாரத்துறையினருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்தான நெடுஞ்சாலைகள், பள்ளிகள் மற்றும் பிற பகுதிகளில் நிற்கும் மரங்களை சம்மந்தப்பட்ட துறைகள் மூலம் அகற்றப்பட்டதை உறுதி செய்ய அனைத்து வட்டாட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. மரங்கள் மற்றும் மரக்கிளைகள் மின்கம்பிகள் மீது தொட்ட நிலையில் காணப்பட்டால் மின்சாரவாரியம் மூலம் மரம் மற்றும் மரக்கிளைகளை வெட்டி அகற்றவும், மின்பழுது தொடர்பான புகார்களை தெரிவிக்க 24 மணி நேரமும் இயங்கும் தொலைப்பேசி எண் 9498794987 என்ற எண் செயல்பட்டு வருவதை பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும் மின்வாரிய பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியிலிருப்பதோடு, வரும் புகார்களுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மின்சாரவாரிய அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் வீடு மற்றும் அலுவலகங்களின் மேல் பகுதியில் குப்பைகள் மற்றும் மரத்தின் இலைகள் காணப்பட்டால் அவற்றை அப்புறப்படுத்தி தண்ணீர் தேங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் தண்ணீரை நன்றாக கொதிக்க வைத்து பருகவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் பாட்டில், டயர்கள், தேங்காய் சிரட்டைகள் இவற்றில் தண்ணீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தி ஏற்பட்டு டெங்கு போன்ற காய்ச்சல்கள் பரவ வாய்ப்புள்ளதால் அவற்றை அப்புறப்படுத்தி எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு தேவையான பால், பால் பவுடர், உணவு பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உள்ளிட்டவைகளை தயார் நிலையில் வைத்திருக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

காய்ச்சல், சளி இது போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சென்று பரிசோதனை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு நோய்தொற்று ஏற்பட்டால் கால்நடை மருத்துவரை அணுகவும் மற்றும் கால்நடைகள் இறந்தால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தவும், அவற்றிற்கு உடற்கூறு ஆய்வு செய்து இழப்பீட்டு தொகையினை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென துறை அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மழை வெள்ள பாதிப்பு சேதங்கள் தொடர்பான 24 மணி நேரமும் இயங்கும் மாவட்ட கட்டுப்பாட்டு அறை கட்டணமில்லா தொலைப்பேசி எண் 1077 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு பொதுமக்கள் புகார்களை தெரிவிக்கலாம் என்ற விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறையினர் பழுதடைந்த சாலைகளை போர்கால அடிப்படையில் சீரமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில் பொதுமக்கள் ஆறு மற்றும் கடலோரப் பகுதிகளுக்கு செல்லாமல் பாதுகாப்பாக இருக்கவும், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளை மேற்படி பகுதிகளுக்கு அழைத்துச்செல்லாமல் தற்காத்துக்கொள்ளவும், தன்னார்வலர்கள் தங்கள் பகுதிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதை போன்று பருவமழை காலங்களில் ஒரு உயிரிழப்பு கூட ஏற்படாத வகையில் நமது செயல் திட்டம் இருக்க வேண்டும். பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் இல்லாத வகையிலும், அவ்வாறு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் அதனை உடனடியாக களையயும் வகையில் நாம் மிகுந்த வேகத்தோடு செயல்பட வேண்டும் என அனைத்து அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஒவ்வொரு துறையினரும் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்துப்பட்டுள்ளது. அவற்றை அனைத்து அலுவலர்களும் உள்வாங்கி கொண்டு பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு சிறப்பாக செயல்பட வேண்டும். வடகிழக்கு பருவமழை காலத்தை அனைத்து துறையினரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என அனைத்து துறை அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

நடைபெற்ற கூட்டத்தில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), செ.ராஜேஷ் குமார் (கிள்ளியூர்), முனைவர் தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) பாபு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ். காளீஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சுகிதா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் சின்னகுப்பன், வட்டாட்சியர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (13.10.2024) நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா தலைமையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தரவதனம், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), செ.ராஜேஷ் குமார் (கிள்ளியூர்), திருமதி.தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) பாபு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய் குமார் மீனா உட்பட பலர் உள்ளார்கள்.